<u>சுருக்கம்</u>

தொழில்நுட்பக் கல்வி – 2008–2009–ஆம் கல்வியாண்டு முதல் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் (Government Polytechnic Colleges) மற்றும் சிறப்புப் பயிலகங்களில் (Special Institutions) பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் (Tuition fees) செலுத்துவதிலிருந்து விலக்களித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர் கல்வி (பி2) துறை

அரசாணை (நிலை) எண்.259 நாள்: 26.6.2008.

படிக்கப்பட்டவை:

தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25, கடித எண். 15459/ஐ1/2008, நாள் 15.5.2008 மற்றும் 30.5.2008.

–––––

<u>ஆணை:</u>

14.5.2008 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் (Government Polytechnic Colleges) பயில்கிற மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் ரூ.2500/–ஐ இரத்து செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதியளித்த நிலையில், 2008–2009 ஆம் கல்வியாண்டு முதல் அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் ரூ.2500/– இரத்து செய்யப்படுகிறது என அறிவிப்பு செய்தார்கள்.

2. மேற்கண்ட அறிவிப்பினை தொடர்ந்து, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் இப்பொருள் குறித்து பார்வையில் படிக்கப்பட்ட தனது கருத்துருவில், 2008–2009ஆம் கல்வியாண்டு முதல் 17 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 5 சிறப்புப் பயிலகங்களில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளித்து இலவச கல்வி வழங்கும் வகையிலான அரசு ஆணையை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து, 2008–2009ஆம் கல்வியாண்டு முதல் 17 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் (Government Polytechnic Colleges) மற்றும் 5 சிறப்புப் பயிலகங்களில் (Special Institutions) பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் (Tuition fees) ரூ.2500/–ஐ (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.153/DS(RC)/2008, நாள் 24.6.2008ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35/5/1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அதிகாரிகள்.
<u>நகல்</u> மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
அனைத்துப் பிரிவுகள், உயர் கல்வித்துறை.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.